அம்பத்தூர்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 386/2012 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.சா.1 19.08.2025

பெயர் ஜேம்ஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

குறுக்கு விசாரணை:–

1. நான் இந்த வழக்கில் நான் பிரதிவாதி ஆவேன். எனக்கு எதிராக என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் நான் அத்துமீரி நுழையகூடாது என்று கேட்டுள்ளார்கள். தாவா சொத்தின் அளவு 1 கிரவுன்ட் இருக்கும். சர்வே எண் 463/7 ஆகும். எனக்கு சொந்த ஊர் வெள்ளானூர் ஆகும். தாவா சொத்தில் வீடுகட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. 2012 வருடத்தில் தாவா சொத்து காலி இடமாக இருந்தது. தாவா சொத்தில் மனைபிரிவு செய்யப்பட்டு இருந்ததா என்றால் தெரியாது. சர்வே எண் 463 ஆதியில் பத்மாவதி அம்மாள் என்பவருக்கு சொந்தமானது. சர்வே எண் 463/7 எப்போது பிரிந்தது

என்றால் தெரியாது.

2. சர்வே எண் 463/7 மொத்த அளவு சரியாக தெரியாது. சர்வே எண் 463/7 சுற்றி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் அப்படியே உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதில் வேலி அமைத்து வாதி பாதுகாத்து வருகிறார்கள் என்றால் தெரியாது.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)